சுருக்கம்

அகில இந்திய குடிமைப்பணி தேர்வு பயிற்சி மையம், சென்னை –40, பயிற்சி மையத்தில் தங்கி பயிலும் ஆதி திராவிடர், பழங்குடியினர், பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், மற்றும் சீர்மரபினர் மாணவ–மாணவிகளுக்கு உணவு வழங்க மாதாந்திர உணவு கட்டணம் ரூ.800/–லிருந்து ரூ.1200/– ஆக உயர்த்தி வழங்கி ஆணை வெளியிடப்படுகிறது.

---

**பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்த (பயிற்சி.3) துறை**

**அரசாணை (நிலை) எண். 94** **நாள்: 29.7.2011**
**திருவள்ளுவர் ஆண்டு 2042**
**ஆடி : 13**

படிக்க:

1) அரசாணை (நிலை) எண்.7, பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை, நாள். 3.2.2000.
2) அரசாணை (நிலை) எண்.106, பணியாளர் மற்றும் நிருவாக சீர்திருத்தத் (பயிற்சி.3) துறை, நாள்.20.6.2000.
3) அரசாணை (நிலை) எண்.146, பணியாளர் மற்றும் நிருவாக சீர்திருத்தத் (பயிற்சி.3) துறை, நாள்.14.08.2008.
4) இயக்குநர், அண்ணா மேலாண்மை நிலையம் மற்றும் பயிற்சித் துறை தலைவர் (பொறுப்பு) அவர்களின் கடித எண். டிஜிட்டி/241/2010, நாள். 01.11.2010 மற்றும் 12.01.2011.

*****

**ஆணை:**

அகில இந்திய குடிமைப்பணி தேர்வு பயிற்சி மைய விடுதியில் உணவு வகைகள் தயாரிக்க தேவையான மளிகைப் பொருட்கள், காய்கறி, முட்டை, பால் மற்றும் சமையல் எரிவாயு போன்ற பொருட்களை வாங்கி தற்போது மாணவர்களுக்கு மாதம் முழுவதும் அதாவது ஒரு நாளைக்கு மூன்று வேளை வீதம் உணவு வழங்குவதற்கு மேலே மூன்றாவதாக படிக்கப்பட்ட அரசாணையில் நிர்ணயிக்கப்பட்டுள்ள மாதாந்திர உணவு கட்டணம் (ஒரு மாணவனுக்கான மாதாந்திர உணவு கட்டணம் ரூ.800/– ) போதுமானதாக இல்லை என்றும் மேற்படி உணவு வகைகளை தயாரித்து வழங்குவதற்கு ஒரு மாணவனுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.1115/– வரை செலவாகிறது என்றும் மேலும், அகில இந்திய குடிமைப்பணிகள் என்பது ஒரு கௌரவமான பணி என்பதால் மேற்படி பயிற்சி மையத்தில் பயிற்சி பெறும் மாணவர்களுக்கு வழங்கப்படும் உணவு வகைகள் சத்தானதாகவும், தரமுள்ளதாகவும் இருக்க வேண்டியது மிகவும் அவசியம் என்ற நிலையில், மேற்படி பயிற்சி மையத்தில் பயிற்சி பெறும் மாணவ – மாணவிகளுக்கு வழங்கப்பட்டு வரும் தற்போதுள்ள மாதாந்திர உணவு கட்டணத்தை ( ஒரு மாணவனுக்கு ஆகும் செலவு) ரூ.800/–லிருந்து ரூ.1200/– உயர்த்தி வழங்குமாறு அண்ணா மேலாண்மை நிலைய இயக்குநர் மற்றும் பயிற்சித் துறை தலைவர் அரசைக் கோரியுள்ளார்.

த.பி.பா

2) அண்ணா மேலாண்மை நிலைய இயக்குநர் மற்றும் பயிற்சித் துறை தலைவர் தெரிவித்த கருத்துருவினை அரசு கவனமாகப் பரிசீலித்து, தற்போது அகில இந்திய குடிமைப் பணி தேர்வு பயிற்சி மையத்தில் தங்கி பயிலும் ஆதிதிராவிடர், பழங்குடியினர், பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினரின் ஒரு மாணவ / மாணவிகளுக்காகும் மாதாந்திர உணவு கட்டணத்தை ரூ.800/-லிருந்து ரூ.1200/- ஆக உயர்த்தலாமென அரசு முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

3) இந்த ஆணை நிதித் துறையின் இசைவுடன் வெளியிடப்படுகிறது. நிதித்துறையின் அலுவல் சார்பற்ற குறிப்பு எண். 39475/Pub/11 நாள் 29.7.2011.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**வெ. இறையன்பு**
**அரசு செயலாளர்**

<u>பெறுநர்</u>:-
இயக்குநர்
அண்ணா மேலாண்மை நிலையம் (ம) பயிற்சி துறை தலைவர்
"மகிழம்பூ," 163/1 .ப்பி, எஸ். குமாரசாமி ராஜாசாலை, சென்னை 28.
செயலர்,
பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை
சென்னை -9.
செயலர்,
ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, சென்னை-9.
இயக்குநர், பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை, சென்னை -5.
மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல இயக்குநர், சென்னை-5.
ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, சென்னை-5.
சம்பளக் கணக்கு அலுவலர் (தெற்கு) சென்னை -35.
மாநில கணக்காயர், சென்னை -18/35.
நகல்:
முதலமைச்சரின் முதன்மை செயலாளர் III, சென்னை-9.
செய்தி, சட்டம், நீதிமன்றங்கள் (ம) சிறைச் சாலைகள் துறை அமைச்சரின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை-9.
நிதித்துறை அமைச்சரின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை-9.
அனைத்து செயலகத் துறைகள், சென்னை -9.
நிதி (பொது) துறை, சென்னை -9.
பணியாளர் மற்றும் நிருவாக சீர்திருத்தத் (பயிற்சி.1/ நி.சீ.2) துறை, சென்னை -9.
இ.கோ / உபரி

**//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//**

3/7/2011

**பிரிவு அலுவலர்**